# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
## க.பொ.த சாதாரணதரப் பரீட்சை
## இரண்டாம் தவணை – 2018

| வரலாறு I | | 33 | T | I | | 01 மணித்தியாலம் |
|---|---|---|---|---|---|---|

அறிவுறுத்தல் :
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

1. இலங்கை வரலாறு தொடர்ச்சியாக எழுதப்பட்டமை, கி.பி.5ஆம் அல்லது 6ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டமை போன்ற விடயங்கள் எந்த மூலாதாரத்துடன் தொடர்புடையவை?
   தீபவம்சம் (2) தாதாவம்சம் (3) போதிவம்சம் (4) மகாவம்சம்

2. இலங்கை வரலாற்றினை அறிய உதவும் கிரேக்க மூலாதாரம்
   பூகோளசாஸ்திரப்பிரவேசம் (2) டிமுன்டோ
   (3) சிலப்பதிகாரம் (4) நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா

3. முற்கால மக்களின் கலையாற்றல், சுற்றாடல் பாதுகாப்பு, கட்டடக்கலை போன்றவற்றினை அறிய உதவும் தொல்பொருள் சான்று?
   (1) கல்வெட்டுக்கள் புராதன சிதைவுகள்
   (3) நாணயங்கள் (4) செதுக்கல்கள்

4. "காட்டுப்பலா விதைகளை தீயில் சுட்டு உண்டமை","உப்பினைப் பயன்படுத்தியமை" என்பதற்கான சான்றுகள் கிடைத்த குகை
   (1) பாகியன்கல (2) கித்துள்கலபெலிலென
   (3) குருவிட்ட பட்டதொம்பலென (4) அத்தனகொட அலுலென

5. இலங்கையின் குடியிருப்புக்கள் பரம்பியிருந்த பிரதேசங்களைச் சரியாக காட்டும் சுட்டியாக அமைவது?
   (1) கல்லறை மயானங்கள் (2) துறைமுகத்தை அண்டிய கிராமங்கள்
   (3) கிராமக்குளங்கள் (4) நகரக்குடியிருப்புக்கள்



kalvi.lk

6. நரேஸ்வர, அலகபயமகாராஜா, காலிங்க சக்கரவர்த்தி பெருமான் என்னும் பெயர்களால் தங்களை அறிமுகப்படுத்திய அரசர்களின் ஒழுங்கு முறையைத் தெரிக.
(1) குட்டகண்ண அபய, 1ம் காசியப்பன், நிஸங்கமல்ல
(2) 1ம் காசயப்பன, மகாசேனன, குட்டகண்ணஅபய
(3) குட்டகண்ணஅபய, 5ம் காசியப்பன், மகாசேனன்
(4) துட்டகைமுனு, குட்டகண்ணஅபய, மகாசேனன்

7. புராதன காலத்தில் ஆசியாக்கண்டத்தைச் சேர்ந்த அரசர்கள் தம்மை அறிமுகம் செய்ய வழக்கமாகக் கையாண்டுவந்துள்ள பெயர்?
(1) நரேஸ்வர (2) மின்னேரித்தெய்வம் (3) குபேரக்கடவுள் (4) மலையின் அரசன்

8. பின்வரும் அதிகாரிகள் அவர்களது பதவிப்பெயர்களில் ஒரு சோடி பொருத்தமற்றது அதனைத் தெரிவு செய்க?
(1) பொருளாளர் - படகரிக
(2) நகரபரிபாலகர் - நகரகுத்திக
(3) காசு அச்சிடும் பிரிவின் தலைவர் - பன அதேக
(4) வழக்கங்கள் மரபு முறைகளுக்கான அதிகாரி- கொதுறுகேனா

9. கி.பி.9ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் பல்வேறு குறியீடுகள் காணப்படுகின்றன அவற்றில் அன்னம் அடையாளத்தின் மூலம் உணர்த்துவது.
(1) சௌபாக்கியம் (2) தூய்மை (3) பாதுகாப்பு (4) நிறைவு

10. 35000வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்டகால மனித சமூகத்தில் வாழிடமாக விளங்கிய பாகியன்கல குகை அமைந்துள்ள மாவட்டம் எது?
(1) கேகாலை (2) இரத்தினபுரி (3) களுத்துறை (4) அம்பாந்தோட்டை

11. இலங்கையின் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான நானாதேசி வர்த்தக நிறுவனத்துக்குரிய உலோக முத்திரைகள் கண்டெடுக்கப்பட்ட இடம்?
(1) மட்டக்களப்பு (2) வல்லிபுரம் (3) களுத்துறை (4) அம்பாந்தோட்டை

12. 7 மைல் நீளமும் 44 அடி உயரமும் கொண்ட செயற்கையாக அமைக்கப்பட்டுள்ள குளக்கட்டைக் கொண்ட வாவி?
(1) குருளுவாவி (2) யோதவாவி (3) மகாகனதராவாவி (4) நாச்சதுவவாவி

13. முற்காலத்தில் நிறையை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அலகு?
(1) சுவர்ண (2) மொஹுத்த (3) அமுண (4) வியத்த

14. முற்காலத்தில் இலங்கையின் தொழிநுட்பம் ஒன்று தெற்காசியாவில் பரவலடைந்தது


kalvi.lk

அத்தொழிநுட்பத்தை தெரிவு செய்க?

(1) அலைதாங்கி (2) கலிங்கல் (3) கலிங்கல்தொட்டி (4) அணைக்கட்டு

* நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக்கூடாது

* காட்டு மரங்களை எவரும் வெட்ட வேண்டாம்

15. மேலே தரப்பட்ட சட்டங்களை இயற்றிய மன்னர்கள் முறையே

(1) ஐந்தாம் காசியப்பன், நிஸ்ஸங்கமல்ல (2) நான்காம் மகிந்தன், நிஸ்ஸங்கமல்ல

(3) நிஸ்ஸங்கமல்ல, மூன்றாம் உதய (4) நான்காம் மகிந்தன், மூன்றாம் உதய

16. கி.மு 2ம் நூற்றாண்டளவில் சாதாரண சமுதாயத்தில் வாழ்ந்தபெண்களும் தலைமைத்துவம் வகிப்பதில் தடைகள் இருக்கவில்லை என்பதற்கு சான்றாக அமைந்த பெண் ஆட்சியாளர்?

(1) தல்தா லக்ஷ்மி (2) சமனா (3) அசோகமாலா (4) லீலாவதி

17. போஜக்கபதி என்ற வரி பின்வரும் எச்செயற்பாட்டிற்காக அறவிடப்பட்டது.?

(1) வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தல்

(2) வாய்க்கால்களில் மீன் பிடித்தல்

(3) குளத்து நீரைப்பயன்படுத்துதல்

(4) அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்தல்

18. இராசரட்டை கலிங்கமாகனிடம் வீழ்ச்சியடைந்ததும் மக்களையும் புத்தசாசனத்தையும் பாதுகாக்க மினிப்பேயில் கோட்டை அரண் கட்டிய தேசியத் தலைவன்?

(1) சுபதளபதி (2) புவனேகபாகு ஆதிபாத

(3) சங்கதளபதி (4) விஜயபாகு இளவரசன்

**கீழே குறிப்பிட்டுள்ள இலக்கியங்களை அவதானித்து 19ம் 20ம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**

(A) கவிசிலுமின (B) சிங்கள போதிவம்சம் (C) பரவிசந்தேசய

(D) கந்தவுருசிரித்த (E) தலதாசிரித்த (F) காவிய சேகர

19. குருநாகல் இராச்சிய காலத்துக்குரிய நூல்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்?

(1) B,E (2) A,C (3) D,F (4) E,F

20. கோட்டை இராச்சிய காலத்துக்குரிய நூல்களை குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள்?

(1) C,F (2) A,B (3) C,E (4) D,F



kalvi.lk

21. கண்டி இராச்சிய காலத்தில் புனித தந்ததாது மற்றும் ஆடையணிகள் என்பவற்றுக்குப் பொறுப்பான செயலாளர்கள்?

(1) தியவடன நிலமே, முகாந்திரம் (2) தியவடன நிலமே, சலுவடன நிலமே

(3) மகாநாயக்க, பிரதமசெயலாளர் (4) சலுவட்ன நிலமே, பத்வடன நிலமெ

22. கண்டி இராச்சியத்தின் உரிமையையும் அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு பிரதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்ட நிலம்?

(1) கபாடகம் (2) விகாரகம் (3) நிந்தகம் (4) பரவேனிகம்

**அட்டவணையை அவதானித்து இல 23,24 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிக**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| A-கன்னொருவ | D - சங்கிலி | G - தொன்ஜெரனிமோ தி அசவேது |
| B - யாழ்ப்பாணம் | E - 1ம் விமலதர்மசூரியன் | H - பிலிப் த ஒலிவேரா |
| C - பலன | F - 2ம் இராஜசிங்கன் | I-தியாகோத மெல்லோ |

23. G என்ற எழுத்தால் குறிப்பிடப்படும் போர்த்துக்கேயத் தளபதியுடன் தொடர்புடைய தகவல்களுக்கான ஆங்கில எழுத்துக்களை நிரல் I,II இலிருந்து தெரிவு செய்க?

(1) B,D (2) A,F (3) B,E (4) C,E

24. B என்ற எழுத்தால் குறிக்கப்படும் இராச்சியத்துடன் தொடர்புடைய தகவல்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை நிரல் II,III இலிருந்து தெரிவு செய்க?

(1) E,I (2) F,G (3) D,I (4) D,H

- போர்த்துகேயரை வெளியேற்ற ஒல்லாந்தரின் உதவியை நாடுதல்
- ஒல்லாந்தரை வெளியேற்ற ஆங்கிலேயரின் உதவியை நாடுதல்

25. மேற்குறித்த இரு தகவல்களுடன் தொடர்புடைய கண்டி மன்னர்கள்?

(1) 2ம் இராஜசிங்கன்,1ம் விமலதர்மசூரியன்

(2) 1ம் விமலதர்மசூரியன், 2ம் இராஜசிங்கன்

(3) 2ம் இராஜசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்

(4) 2ம் விமலதர்மசூரியன், இராஜாதி இராஜசிங்கன்

A- முஸ்லிம் ஒருவருக்கு முகாந்திரப்பதவி வழங்கப்படல் B- புதிய வரிகள் விதிக்கப்படல்

26. மேற்குறிந்த தகவல்களின் படி 1848 சுதந்திரப்போராட்டத்துக்கான உடனடிக்காரணம்?

(1) A சரியானது B பிழையானது (2) A பிழையானது B சரியானது

(3) A யும் B யும் சரியானவை (4) A யும் B யும் பிழையானவை

27. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணம் வடக்கு பிரதேசங்களில் தமது சமய நடவடிக்கைகளை செயற்படுத்திய கிறிஸ்தவ மிஷனறி?



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page